508
508/52

கமலை வாசகம்

இரண்டாம் வகுப்பு

JB
031 (2)
N51
137388

...காப் பதிப்பகம்,
வி.............திருவாரூர்., ஜங்.

கமல் வாசகம்

இரண்டாம் புத்தகம்

ஆசிரியர்

வித்துவான் ரா. விசுவநாதன் எம்.ஏ.,பி.ஓ.எல்.,

(முன்பு) சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பேராசிரியர்

&

பண்டிதர் செ. முத்துரத்ன முதலியார்,

(முன்பு) திருவாரூர், அரசியல் உயர்தரக் கலாசாலைத்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

விவேகானந்தாப் பதிப்பகம்

விஜயபுரம் : திருவாரூர் ஜங்.

பதிப்புரிமை] 1951 [விலை 6 அணா

முதற் பதிப்பு 1951.

132388

Printed at the Rajan Electric Press, Madras—1.

முகவுரை

இன்றைய மாணவர் நாளை நாட்டு மக்கள். நம் நாடு சுய உரிமை பெற்ற நாடு. நம் மக்களின் அறிவு வளத்திலும் ஆற்றல் வலிமையிலும் ஒழுக்கப் பெருமையிலுமே நம் நாட்டின் வருங்காலச் சிறப்பு அமையக் கிடக்கின்றது. மொழி ஒரு சமூகக் கருவி. அதன் வழியாகவே சமூக வளர்ச்சியும் ஆக வேண்டும். ஆகவே இன்றைய சூழ் நிலையில் மொழிப் பயிற்சி ஒரு தனி இடம் பெற்று விளங்குகிறது.

அரசியலார் வகுத்துள்ள பாடத்திட்டமும், ஆன்றோர்களின் அனுபவ முறைகளும் மொழிப் பயிற்சியின் வழியாகக் கல்வியின் குறிக்கோள்கள் எவ்வாறு பெறப்படலாம் என்று காட்டுகின்றன. அடிப்படைக் கல்வித் திட்டமும் இக் குறிக்கோள்களையே வற்புறுத்துகின்றன. மொழியை மொழியறிவுக்காகப் படிப்பிப்பதோடு அதனை வாழ்க்கையோடும் ஒட்டிப் பயிற்றுவிக்க வேண்டுமென்பது மேலே சுட்டிய எல்லாத் திட்டங்களின் கொள்கையாகும்.

இக் கருத்துக்களை உட்கொண்டு சுருங்கிய முறையில் நிரம்பிய பயனைப் பெற உதவவேண்டுமென்று இப் புத்தகம் எழுதப் பெற்றுள்ளது. பிள்ளைகளுடைய அறிவுக்கொத்த பாடங்களே இங்குத் தரப் பெற்றுள்ளன. கண்டன கொண்டு காணாதனவற்றை ஊகிக்க வழிகள் கையாளப் பட்டுள்ளன. பாடங்கள் பெரும்பாலும் வாய்ப் பாடங்களாகவும் மௌன பாடங்களாகவும் பிள்ளைகள் இன்பத்துடன் தாமே படித்தறியத் தக்கவைகளாகவும் பொறுக்கிச் சேர்க்கப் பெற்றுள்ளன. பேச்சுப் பழக்கமும் உய்த்தறியும் திறனும், குறித்து சொல்லும் ஆற்றலும், தம்மைச் சூழ்ந்துள்ளவற்றை உற்று நோக்கும் பழக்கமும்,

வளர உதவும்வண்ணம் பாடங்களும் பயிற்சிகளும் அமைக்கப் பெற்றுள்ளன. நாட்டுப்புறத்தின் இன்றியமையாமையும் சிறப்பும் மாணவர்களின் கருத்தில் ஊன்ற முறைகள் கையாளப் பெற்றுள்ளன.

இவ்வகுப்பில் வாய்ப் பேச்சின் தெளிவும் நேர்மையுமே அதிகமாகக் கவனிக்கப் பெற வேண்டியவை. கையெழுத்தின் அழகைக்காட்டிலும் தெளிவே வற்புறுத்தத்தக்கது. கட்டுரையாக்கம் குறித்தபொருளைக் குறித்த முறையில் வைத்துப் பேசச் செய்தல் போதுமானது. இலக்கணம் என்பது அனுபவத்தில் வேண்டியதே யன்றி இலக்கண பாடமாக அமைதல் ஆகாது. உச்சரிப்பு தெளிவாய் அமைய வேண்டும். இக்குறிக் கோள்களைக் கொண்டு பயிர்ச்சிகள் கையாளப் படவேண்டுமே யன்றி பிள்ளைகள் வினாக்களுக் கெல்லாம் விடை எழுதப் பழக வேண்டுமென்பது இவ் வகுப்பிற் கூடாது. ஆகவே பாடங்களும் பயிற்சிகளும் மாணவர்களின் பேச்சு வன்மையைத் தூண்டவே அமைக்கப் பெற்றுள்ளன.

இறைவன் அருளால் இக் குறிக்கோள்கள் நிறைவேற இப்புத்தகம் சிறந்த கருவியாகப் பயன்பட வேண்டுமென்று அவன் திருவருளை வணங்குகின்றோம்:

பிரசுரகர்த்தர்

பொருளடக்கம்

எண்	பாடம்		பக்கம்
1.	பெயர்கள்	...	1
2.	என் ஊர்	....	3
3.	என்ன ?	...	5
4.	நாட்கள்	...	7
5.	உடல் உறுப்புக்கள்	...	9
6.	நாயும் காகங்களும்	...	11
7.	காகத்தின் ஊகம்	...	14
8.	கடை	...	17
9.	எதிரிடைச் சொற்கள்	....	20
10.	குரங்காட்டி	...	22
11.	இவ்வளவு பெரியதா ?	....	24
12.	உழவு	...	26
13.	மாட்டு வகைகள்	...	30
14.	கோழி	...	31
15.	பாட்டுக்கச்சேரி	....	34
16.	கூடை முடைதல்	...	37
17.	நாப்பழக்கம்	....	39
18.	சூரியன்	....	40
19.	சூரியன் குஞ்சு	....	43
20.	விடுகதைகள்	...	47
21.	காட்சிச்சாலை	...	49
22.	வீர வீரப்பன்	...	52
23.	பாட்டி வீட்டுப் பழம்பானை	....	55
24.	தீபாவளி	...	58
25.	பழமொழிகள்	....	61
26.	உன்னைச் சுற்றிப்பார்	...	62
27.	காற்றாடி	...	64
28.	பால் பிடிக்காத பூனை	...	67
29.	உலகநீதி	...	71
30.	ஆத்தி சூடி	....	72

1. பெயர்கள்



உன் பெயர் என்ன ?

என் பெயர்......... ....

என் பெயர் என்ன ?

உங்கள் பெயர்........,....................

அவன் பெயர் என்ன ?

அவன் பெயர்.......................... ......

அவள் பெயர் என்ன ?

அவள் பெயர்....................................

உன் தந்தையின் பெயர் யாது?

என் தந்தையின் பெயர்……………………

உன் தாயாரின் பெயர் யாது?

என் தாயாரின் பெயர்……………………

இந்த ஊரின் பெயர் யாது?

இந்த ஊரின் பெயர்……………………

பயிற்சி

1. படி

ஆறுமுகம்	மதுரை	வள்ளி
இஸ்மாயில்	திருப்பதி	சுந்தரி
ஜான்	ஸ்ரீரங்கம்	ஜானகி

2. எழுது

வகுப்பிலுள்ள பிள்ளைகளின் பெயர்களை எழுது.

---

2. என் ஊர்



உன் ஊரின் பெயர் என்ன ?

அதில் எத்தனை தெருக்கள்
இருக்கின்றன ?

நீ எந்தத் தெருவில் இருக்கிறாய் ?

குளம் எங்கே இருக்கிறது ?

கோவில் எங்கே இருக்கிறது ?

உன் ஊரில் ஆறு உண்டா ?

நீ மலை பார்த்திருக்கிறாயா ?

உன் மாமன் ஊர் யாது ?

உன் அத்தையின் ஊர் யாது ?

பயிற்சி

1. படி

திருவாரூர்	புதுக்கோட்டை	திருச்சிராப்பள்ளி
விஜயபுரம்	வாணியம்பாடி	நாகப்பட்டினம்
மதுரை	திருப்பதி	தலைச்சேரி

2. எழுது

உன் ஊரைச் சுற்றியுள்ள வேறு ஊர்களின் பெயர்களை எழுது.

3. என்ன?



இது என்ன?

இது பசு.

இவன் யார்?

இவன் பாம்பாட்டி.

இவள் என்ன செய்கிறாள்?

இவள் ராட்டினம் சுற்றுகிறாள்.

கன்று என்ன செய்கிறது?

கன்று பால் குடிக்கிறது.



ஆடுகள் என்ன
செய்கின்றன ?
ஆடுகள் புல்
மேய்கின்றன.

குடியானவர்கள் என்ன
செய்கிறார்கள் ?

அவர்கள்
கதிர்
அறுக்கிறார்கள்.

பயிற்சி

1. விடை சொல்

(1) எது பால் குடிக்கிறது ?
(2) ஆடுகள் என்ன செய்கின்றன ?
(3) பாம்பாட்டி என்ன செய்கிறான் ?
(4) குடியானவர்கள் என்ன செய்கிறார்கள் ?
(5) நீ என்ன செய்கிறாய் ?
(6) நான் என்ன செய்கிறேன் ?

2. எழுது

வா	எடு	திற	உண்	தூங்கு
போ	கொடு	மூடு	தின்	எழு
இரு	விடு	வை	பார்	ஓடு
நட	சுடு	படி	பேசு	நில்

4. நாட்கள்

ஆகஸ்டு 1951 கர ஆண்டு ஆடி - ஆவணி					
ஞாயிறு		5 20	12 27	19 3	26 10
திங்கள்	★	6 21	13 28	20 4	27 11
செவ்வாய்	★	7 22	14 29	21 5	28 12
புதன்	1 16	8 23	சுயாட்சிநாள் 15 30	22 6	29 13
வியாழன்	2 17	9 24	16 31	23 7	30 14
வெள்ளி	3 18	10 25	ஆவணி அவிட்டம் 17 1	24 8	31 15
சனி	4 19	11 26	18 2	கிருஷ்ண ஜயந்தி 25 9	★

இந்தப் படத்தைப் பார்.
இது எதன் படம்?
இது ஆண்டு, மாதம், கிழமை, நாள் ஆகியவற்றைக் காட்டும் படம்.
இது என்ன ஆண்டு?
இது கர ஆண்டு.
இன்று கிழமை என்ன?
இன்று..............கிழமை.
இன்று தேதி என்ன?
இன்று..............தேதி.
நீ பிறந்த நாள் யாது?
நான் பிறந்த நாள்..............

பயிற்சி

1. உரக்கப் படி

தமிழ் மாதங்கள்		ஆங்கில மாதங்கள்	
1.	சித்திரை	1.	ஜனவரி
2.	வைகாசி	2.	பிப்ரவரி
3.	ஆனி	3.	மார்ச்
4.	ஆடி	4.	ஏப்ரல்
5.	ஆவணி	5.	மே
6.	புரட்டாசி	6.	ஜூன்
7.	ஐப்பசி	7.	ஜூலை
8.	கார்த்திகை	8.	ஆகஸ்டு
9.	மார்கழி	9.	செப்டம்பர்
10.	தை	10.	அக்டோபர்
11.	மாசி	11.	நவம்பர்
12.	பங்குனி	12.	டிசம்பர்

கிழமைகள்

1.	ஞாயிறு	5.	வியாழன்
2.	திங்கள்	6.	வெள்ளி
3.	செவ்வாய்	7.	சனி
4.	புதன்		

கிழமைகள் ஏழு, வாரம் ஒன்று.
இருபத்துநான்கு மணிநேரம் ஒரு நாள்.
நாட்கள் முப்பது, மாதம் ஒன்று.
மாதங்கள் பன்னிரண்டு, ஆண்டு ஒன்று.

2. விடை சொல்லு

(1) வருஷப்பிறப்பு எப்பொழுது வரும் ?
(2) பொங்கல் எந்த மாதத்தில் வரும் ?
(3) டிஸம்பர் மாதத்தில் வரும் விழா யாது ?
(4) உனக்குப் பெரிய விடுமுறை எப்பொழுது வரும் ?
(5) நீ பஞ்சாங்கம் பார்த்திருக்கிறாயா ?

3. எழுது

இந்த மாதத்தில் விடுமுறைநாட்கள் யாவை ?
....

5. உடல் உறுப்புக்கள்

தலையில் மயிர் வளர்கிறது.

தலைக்குள் மூளை இருக்கிறது.

முகத்தில் கண்கள், காதுகள், மூக்கு, வாய் ஆகிய உறுப்புக்கள் இருக்கின்றன.

கண்கள் பார்க்கின்றன.

கண்களுக்கு இமைகள் உண்டு.

காதுகள் கேட்கின்றன.

மூக்கு மூச்சு விடுகிறது; மூச்சு வாங்குகிறது.

வாயினுள் நா, பற்கள் இருக்கின்றன.

நா உருசி பார்க்கிறது.

பற்கள் உணவைக் கடிக்கின்றன.

வாய் உண்கிறது; பேசுகிறது.

மார்புக்குள் இருதயம் இருக்கிறது.

வயிறு சோற்றைக் கொள்கிறது.

வயிற்றினுள் குடல்கள் இருக்கின்றன.

கைகள் வேலை செய்கின்றன.

கால்கள் நடக்கின்றன.

பயிற்சி

1. வாய்க்குள் படி

மயிரில்லாத தலை மொட்டை.
காணாக் கண் குருடு.
கேளாச் செவி செவிடு.
பேச முடியாதவன் ஊமை.
கால் இல்லாதவன் நொண்டி.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது.

செவி, துதிக்கை, கால், அலகு.

கழுகுக்கு —— கூர்மையானது.
பாம்புக்கு —— நன்றாய்க் கேட்கும்.
பன்றியின் —— குட்டையானது.
யானைக்கு —— உண்டு.

6. நாயும் காகங்களும்



என்னிடம் ஒரு நாய் இருக்கிறது.

அதன் பெயர் சிப்பாய்.

சிப்பாய்க்குத் தினந்தோறும் நான் ஒரு தட்டில் சோறு போடுவேன்.

ஒரு நாள் சிப்பாய் சோறு தின்று கொண்டிருந்தது. அப்பொழுது அங்கே ஒரு காகம் வந்தது.

காகம் சிப்பாயைப் பார்த்து, "அண்ணு! எனக்கு இரண்டு பருக்கை சோறு கொடு" என்றது.

அதற்குச் சிப்பாய், "வௌ! வௌ! போ! போ!" என்று கூறி அதைக் கடிக்கப்

போயிற்று. காகம் பயந்து ஓடிற்று. அது அருகில் இருந்த மரத்தின் மீது ஏறி, ஒரு கிளையில் உட்கார்ந்து, "கா, கா, கா" என்று நான்கு முறை கரைந்தது. உடனே ஒன்று, இரண்டு, மூன்று காகங்கள் வந்து விட்டன.

அவை நான்கும் நாயைச் சூழ்ந்து கொண்டன. ஒன்று அதன் முன்னே உட்கார்ந்தது; ஒன்று பின்னே உட்கார்ந்தது. மற்ற இரண்டும் பக்கங்களில் இருந்தன.

எல்லாக் காகங்களும் ஒருமிக்கக் கரைந்தன. கா, கா, கா, கா, என்ற ஒலி எல்லாப் புறங்களிலும் எழுந்தது. ஒரு காகம் சிப்பாயின் தலையைக் கொத்த வந்தது. ஒரு காகம் அதன் வாலைப் பிடித்து இழுத்தது.

பாவம்! சிப்பாய் இங்கும் அங்கும் அலையத் தொடங்கிற்று. அது காகங்களை வெருட்ட முயன்றது; குதித்தது; "வௌ! வௌ!" என்று குரைத்தது. ஒன்றும் பலிக்க வில்லை.

இப்படிச் சிப்பாய் குதித்துக் கொண்டிருந்த போது காகங்கள் முன்னும் பின்னுமாக வந்து, தட்டில் இருந்த சோற்றையெல்லாம் தின்று விட்டன.

அன்று, சிப்பாய் பட்டினியாய்ப் போயிற்று.

பயிற்சி

1. விடை கூறு

1. முதலில் காகம் சிப்பாயை என்ன கேட்டது?
2. வேறு மூன்று காகங்கள் எப்படி வந்தன?
3. அவை சிப்பாயை எப்படி அலைய வைத்தன?
4. சிப்பாய் நல்ல நாயா? கெட்ட நாயா?
5. காகம் அறிவுள்ளதா? இல்லையா?

2. எழுது

காகம் கரையும். நாய் குரைக்கும்.
மாடு கதறும். பாம்பு சீறும்.
பன்றி உறுமும். குதிரை கனைக்கும்.

3. கோடிட்ட இடங்களை நிரப்பு

நாய் ஒரு ——— (பறவை, மனிதன், விலங்கு)
காகம் ஒரு——— (பறவை, மனிதன், விலங்கு)
நான் ஒரு ——— (பறவை, மனிதன், விலங்கு)

7. காகத்தின் ஊகம்



பாட்டை மனத்திற்குள் படி

தண்ணீர் கிடையாமல்—காகம் ஒன்று
தவித்து அலைகையிலே,
மண்ணால் செய்த ஒரு—சாடியை
வழியில் கண்ட தம்மா!

சாடியின் மீதிருந்து—தலையைச்
சரித்து நோக்கிடவே
சாடியிலே தூரில்—சற்றே
தண்ணீர் தெரிந்த தம்மா!

காகம் உடன் எழுந்து—சிறுசிறு
கற்கள் பொறுக்கி வந்து
ஊகமாய்ச் சாடியினுள்—அவற்றை
ஒவ்வொன்றாய் இட்ட தம்மா!

இட்டிட வேநீரும்—மேலும்
எழுந்து வந்த தம்மா!
சட்ட மாகக் குடித்துக்—காகம்
தளர்ச்சி தீர்ந்த தம்மா!

ஊக்கம் உடையவர்க்குத்—துன்பம்
உலகில் இல்லை யம்மா!
ஆக்கம் பெருகும் அம்மா!— இதை நீ
அறிய வேண்டும் அம்மா!

— திரு. தேசிகவிநாயகம் பிள்ளை

பயிற்சி

1. விடை சொல்லு

1. காகம் ஏன் தவித்து அலைந்தது?
2. சாடியில் தண்ணீர் எங்கே இருந்தது?
3. காகம் என்ன செய்தது?
4. கற்களைப் போட்டதும் என்ன நேர்ந்தது?
5. இந்தப் பாடலினால் நீ அறிந்தது என்ன?

2. எழுது

ஊகம்	ஊக்கம்
தலை	தளை
தளர்ச்சி	வளர்ச்சி

ஊக்கம் உடையவர் ஆக்கம் பெறுவர்.

3. கோடிட்ட இடங்களை நிரப்பு

(i) சாடி——செய்தது. (கண்ணாடியால், மண்ணால், கல்லால்)

(ii) துணி——செய்தது. (காகிதத்தால், மரத்தால், நூலால்)

8. கடைகள்



முத்து சென்னைக்குப் புதியவன்.

அவன் தந்தை அப்பொழுது தான் சென்னைக்கு வேலை பார்க்க வந்தார்.

அவர் ஒரு நாள் கடைத் தெருவுக்குப் போனார். முத்துவும் பின்னே சென்றான்.

அரிசி, உப்பு, புளி, பருப்பு, சர்க்கரை, எண்ணெய், நெய் முதலிய பொருள்களை அவர்கள் வாங்கினார்கள். பிறகு முத்துவுக்கு அவன் தந்தை சட்டைத் துணி, எழுதுகோல், புத்தகம் முதலியவற்றை வாங்கிக் கொடுத்தார்.

கடைக்காரர் சிலவற்றை முகந்து கொடுத்தார்; சிலவற்றை நிறுத்துக் கொடுத்

தார்; துணிகளை நீட்டி அளந்து கொடுத்தார். எழுதுகோல்களை எண்ணிக் கொடுத்தார்.

மளிகைக் கடைக்காரர், அரிசி, உப்பு, பருப்பு ஆகியவற்றைப் படி, ஆழாக்கு இவற்றால் முகந்தார்.

புளி, சர்க்கரை, எண்ணெய், நெய் இவற்றைத் தராசில் வைத்து, வீசை, சேர், பலம் என்று அவர் நிறுத்துக் கொடுத்தார்.

ஜவுளிக் கடைக்காரர் துணிகளைக் கஜக்கோலால் அளந்து கொடுத்தார்.

புத்தகக் கடைக்காரர் புத்தகங்களை ஒன்று, இரண்டு என்று எண்ணிக் கொடுத்தார்.

முத்துவுக்கு இவையெல்லாம் வியப்பாய் இருந்தன.

அன்று முத்துவுக்கு மகிழ்ச்சி அதிகமாய் இருந்தது,

பயிற்சி

1. விடை சொல்லு

(1) உன் ஊரில் என்ன என்ன கடைகள் உண்டு ?

(2) உன் ஊரில் விளையும் உணவுப் பொருள்கள் யாவை?

(3) உன் ஊரில் தூணி நெய்கிறார்களா ?

2. எழுது

முகத்தல், நீட்டல், எண்ணல், அளத்தல், நிறுத்தல்.

பின் வருவனவற்றை எப்படி அளப்பது ? வரிசைப்படுத்தி எழுது.

காகிதம், கடுகு, கோதுமை, பந்து, நூல், புளி, மண்ணெண்ணெய், வெண்ணெய்.

9. எதிரிடைச் சொற்கள்



யானை பெரியது.

பனை உயரம்.

பாம்பு நீளமானது.

பூனை சிறியது.

புதர் குட்டை.

புழு குறுகியது.

மரப்பட்டை தடிப்பானது.

பழத்தோல் மென்மையானது

பாறை சுரசுரப்பானது.

பளிங்கு, வெண்ணெய் வழவழப்பானது.

தென்னை நேராய் வளரும்

மூங்கில் வளையும்.

வலக்கை உண்ண உதவும்.

இடக்கை உண்ண உதவாது.

கண்கள் முகத்தின் முன்புறம் இருக்கின்றன.

கூந்தல் தலையின் பின்புறம் இருக்கிறது.

வானம் மேலே இருக்கிறது.
நிலம் கீழே இருக்கிறது.
முற்றம் வீட்டின் உள்ளே இருக்கிறது.
திண்ணை வீட்டின் வெளியே இருக்கிறது.
வேலி தோட்டத்தைச் சுற்றி இருக்கிறது.
வாத்து குளத்தின் குறுக்கே நீந்துகிறது.
இடுப்பில் நாடாவை இறுகக் கட்டாதே.
கையில் வளைகளை நழுவ இடு.
மின்சார விளக்கு ஒளி மிக்கது.
எண்ணெய் விளக்கு ஒளி குறைந்தது.

பயிற்சி

1. கோடிட்ட இடங்களை நிரப்பு

வழவழப்பாய், வளைந்து வளைந்து, அடர்ந்து, தாவி.

(1) பாம்பு —— —— ஓடும்.
(2) குரங்கு —— குதிக்கும்.
(3) காட்டில் மரங்கள் —— இருக்கும்.
(4) கண்ணாடி —— இருக்கும்.

2. எதிரிடைச் சொற்கள் கூறு

தண்ணீர், மேடு, சோம்பேறி, அதிகம், அகலம்.

10. குரங்காட்டி

இக் குரங்காட்டியைப் பார்.

இவனிடம் எத்தனை குரங்குகள் இருக்கின்றன ?

எண்ணிச் சொல்.

ஆண் குரங்கைப் பார்.

அது என்ன செய்கிறது ?

அதன் உடைகளைப் பார்.

பெண் குரங்கு கையில் என்ன வைத்திருக்கிறது ?

எது பாவாடை கட்டிக்கொண்டு இருக்கிறது?

ஆடு என்ன செய்கிறது ?

குரங்காட்டி கையில் பிடித்திருப்பது என்ன ?

ஒரு குரங்கு தாண்டிக் குதிக்கிறது.

அது தன் கழுத்திலும் ஒரு குச்சி வைத்திருக்கிறது. குரங்காட்டி குரங்குகளை ஆட்டிப் பிழைக்கிருன். வேடிக்கை பார்ப்பவர்கள் அவனுக்குக் காசு கொடுப்பார்கள். அவர்கள் குரங்குகளுக்குத் தின்பண்டம் கொடுப்பார்கள். குரங்காட்டி, பாம்பாட்டி, கரடிக்காரர், பெருமாள் மாட்டுக்காரர் நம் ஊருக்கு அடிக்கடி வந்து போவார்கள்.

பயிற்சி

1. படி

குரங்காட்டி	விளையாட்டு	தட்டு
பாம்பாட்டி	வேடிக்கை	காசு

2. எழுது

கோடிட்ட இடங்களை நிரப்பு

(1) விறகு வெட்டுகிறவன் ———.

(2) படகு ஓட்டுகிறவன் ———.

(3) பாம்பை ஆட்டுகிறவன் ———.

3. விடைசொல்

(1) தாவும் பிராணிகள் யாவை? சில சொல்லு.

(2) ஊர்ந்து செல்வன யாவை? சில சொல்லு.

(3) குதித்து ஓடும் ஒரு பிராணியின் பெயர் கூறு.

(4) தண்ணீரில் நீந்தும் பிராணிகள் யாவை? சில கூறு.

(5) உயரப் பறப்பன யாவை? அவற்றிற்குப் பொதுப் பெயர் என்ன?

11. இவ்வளவு பெரியதா?

(நாடகப்)

குஞ்சுத் தவளை :—அம்மா, குளக்கரையில் ஓர் எருமை வந்ததம்மா! அது எத்தனை பெரியது தெரியுமா? அது தம்பியை மிதித்து முடமாக்கி விட்டது; அம்மா!

தாய்த் தவளை :—ஐயோ! எருமை எவ்வளவு பெரியது? குழந்தாய்!

குஞ்சு :—மிகப் பெரியது அம்மா! ஒரு மலை மாதிரி இருந்தது, அம்மா!

தாய் :—என்னை விடவா?

குஞ்சு :—ஆமாம், அம்மா.

தாய் :—(உடலை உப்பிக் கொண்டு) இவ்வளவு பெரியதாயிருந்ததா ?

குஞ்சு :—இன்னும் பெரியது.

தாய் :—(இன்னும் உப்பிக் கொண்டு) இவ்வளவு இருக்குமா?

குஞ்சு :—இன்னும் மிகப் பெரியது.

தாய் :—(மேலும் உப்பிக் கொண்டு) இப்பொழுது?

குஞ்சு :—உன்னால் உப்ப முடியாது, அம்மா!

தாய் :—(இன்னும் உப்பிக் கொண்டு) உம்!.... இப்படிச் சொல்லிக் கொண்டே அது வயிறுவெடித்து மல்லாந்தது.

பயிற்சி

1. விடை கூறு

(1) தவளைகள் எங்கே வாழும்?

(2) தவளை முட்டை இடுமா? குட்டி போடுமா?

(3) தவளை ஏன் குதித்துக் குதித்துப் பாய்கிறது, தெரியுமா?

(4) தவளைக் குஞ்சை மிதித்தது எது?

(5) தவளை உப்பினால் எருமை ஆகுமா?

2. படி - எழுது

தண்ணீர்	தாவிற்று	பருத்தது	மல்லாந்தது
குளக்கரை	மிதித்தது	சிறுத்தது	பெரிய
முட்டை	உப்பிற்று	இறந்தது	சிறிய

3 கோடிட்ட இடங்களை நிரப்பு

(1) தவளை——பிராணி. (பெரிய, அகலமான, சிறிய)

(2) எருமையின் உடல்——(குறுகியது, பருத்தது, நெட்டையானது)

(3) தாய்த் தவளை——(அறிவுள்ளது; மூடமானது.)

(4) குஞ்சு——ஆயிற்று. (பொட்டை, செவிடு, மூடம்).

137388

12. உழவு

நாம் உண்ணும் உணவு யாது? நம்மிற் பெரும்பாலோர் அரிசிச் சோற்றையே உண்கிறார்கள். கோதுமை, கம்பு, கேழ்வரகு, தினை முதலியனவும் நமக்கு உண்பொருள்களே. ஆனால் தமிழர்களுக்குச் சிறந்த உணவு அரிசியே.

அரிசி நமக்கு எப்படிக் கிடைக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமே. நெல்லைக் குத்தினால் அரிசியாகும். நம் ஊரில் நெல் விளையும் வயல்களை நீங்கள் பார்த்திருப்பீர்களே.

இன்று நாம் வயற்புறம் போய் அங்கே என்ன என்ன நடக்கின்றன என்று பார்ப்போம்.

இதோ பாருங்கள். குடியானவர் இரண்டு எருதுகளை ஏரில் பூட்டி வயலை

உழுகிறார். முதலில் அவர் வயலில் நீரைப் பாய்ச்சி வைத்திருப்பார். சேற்றில் உழும் போது மண் நன்றாகப் புரண்டுவிடும். அப்படிச் செய்தால்தான் நெற் பயிர் நன்றாய் வேர் விட்டு வளரும்.

பிறகு அவர் பரம்பு அடிப்பார். அப்படிச் செய்வதால் சேறு மேடு பள்ளமில்லாமல் மழ மழவென்று ஒரே தளமாக ஆகும்.

இப்படித் தயாரித்த வயலுக்கு நாற்றங்கால் என்று பெயர். அதில் நன்றாகப் பொறுக்கி எடுத்த நெல் விதைகளை அவர் விதைப்பார். விதைத்து சில நாட்கள் சென்றவுடன் நாற்று முளைக்கும்.

நாற்றங்கால்கள் பார்வைக்கு வெகு அழகாய் இருக்கும். நாற்றுக்கள் வளர்ந்து



சில நாட்கள் ஆனவுடன் அவற்றைப் பிடுங்கி, வயல்களில் கொண்டு போய் நடுவார்கள். அவை அங்கே நன்ருக வளரும். சில மாதங்களில் அவற்றில் கதிர்கள் தோன்றும். அவை முற்றினவுடன் சுமை தாங்காமல் தலை சாய்ந்து விடும்.

பயிர்கள் நன்ருக முற்றினவுடன் குடியானவர்கள் வயல்களுக்குப் போய் அவற்றை அரிவாளால் அறுத்துக் குவிப்பார்கள். பிறகு போர் அடித்து நெல்லைப் பிரித்து வீடுகளுக்குக் கொண்டு போவார்கள். வைக்கோல் மாடுகளுக்கு உணவாகும்.

நீங்கள் பெரியவர்களாகும் போது சிறந்த குடியானவர்களாவீர்கள்.

பயிற்சி

1. எழுது

வயல்	குடியானவர்	பயிர்
நாற்று	உழவு	பரம்பு
கதிர்	அறுப்பு	அரிவாள்

2. விடை கூறு

(1) உன் கிராமத்தில் என்ன என்ன விளை பொருள்கள் உண்டு?

(2) வயல்களில் என்ன விளைகிறது?

(3) தோட்டங்களில் என்ன விளைகின்றன?

(4) வீட்டுக்கொல்லைகளில் என்ன விளைகின்றன?

3. படி

சம்பா நெல்	கார் நெல்	குறுவை நெல்	
அரிசி	நொய்	உமி	தவிடு

கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை.

அரிசி, மாடுகள், நாற்று, அரிவாள்களால்.

(1) ———ஏர் இழுக்கும்.

(2) குடியானவர்கள்———அறுப்பு அறுப்பார்கள்.

(3) நாற்றங்காலில்———முளைக்கும்.

(4) நெல்லிலிருந்து———கிடைக்கும்.

13. மாட்டு வகைகள்

மொட்டைக்கொம்பன்; விரிதலைக் கொம்பன்;
மயிலைக் காளை; ஒற்றை நாடி;
கொட்டைப் பாக்கன்; பச்சைக் கண்ணன்;
கூடு கொம்பன்; கருமேக வண்ணன்;
பட்டடை மீறி; சூடு பிடிங்கி;
பருத்த செம்மறை; யானைச் சுழியன்;
முட்டிக்கால் தட்டி; போர்க்காளை; தூங்கல்;
முழுதும் களத்தினில் நிற்குதாம்
ஆண்டே!

—சிவசயிலப் பள்ளு.

14. கோழி



நாள்தோறும் நம்மை விடியற் காலத்திற் கூவி எழுப்புவது யாது? அதுதான் கோழி.

காகமும் கரைந்து நம்மை எழுப்பும். ஆனால் காகம் நம்மோடு கூடி வாழ்வதில்லை. அதை ஒருவரும் வளர்ப்பதும் இல்லை. ஆனால் கோழியோ நம் வீட்டிலே நம்மோடேயே இருந்து வாழ்கிறது.

ஆண் கோழிக்குச் சேவல் என்பது பெயர். பெண் கோழியைப் பெட்டை என் பார்கள். சேவல் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும்; அதற்குத் தலையில் கொண்டை உண்டு.

பெட்டைக் கோழி முட்டை இடும். கோழி முட்டை வெள்ளை நிறமானது. அது மழமழவென்று இருக்கும். கோழி தன் முட்டைமீது இருந்து அதனை அடைகாக்கும். முட்டை பொரிந்து குஞ்சு வெளியே வரும்.

கோழி தரையைக் கிளறித் தன் அலகால் கொத்துவதைப் பார்த்திருக்கிறாயா? அதற்குப் புழுக்களையும் பூச்சிகளையும் கொத்தித் தின்பதில் விருப்பம் அதிகம். தவிடு, நொய் இவற்றையும் கோழி தின்னும். தவிட்டைச் சிறிதளவு நீருடன் பிசைந்து அதற்கு வைப்பது நல்லது.

கோழி சில சமயங்களில் சிறிய பருக்கைக் கற்களைக் கொத்தித் தின்பதை நீ பார்த்திருக்கிறாயா? ஏன் அது அப்படிச் செய்கிறது? தெரியுமா? நாம் நம் உணவை நம் பற்களால் கடித்து உண்கிறோம். கோழிக்கு வாயில் பற்கள் இல்லை. அதற்குப் பதிலாக அதன் வயிற்றில் ஒரு கற்குடல் உண்டு. கோழியின் இரை அந்தக் குடலில் போய் அரைபடும். அதை நிரப்புவதற்குத்தான் கோழி சிறிய கற்களைப் பொறுக்கித் தின்கிறது.

கோழி எப்படிக் குளிக்கும். தெரியுமா? அது தன் கால் விரல்களால் மண்ணைக்

கிளறிப் புழுதியைத் தன்மீது வாரி இறைத்துக் கொள்ளும். இப்படிச் செய்வதால் அதன்மீது உள்ள பூச்சி புழுக்கள் மாயும்; அழுக்கும் போகும். கோழியின் வால் புறத்தில் ஓர் உறுப்பு உண்டு, அதில் எண்ணெய் போன்ற ஒரு பொருள் உண்டு. கோழி தன் அலகால் அதை எடுத்துத் தன்மீது பூசிக்கொள்ளும். அதனால் அதற்கு மினுமினுப்பு ஏற்படும்.

கோழி சாதுவான பறவை, அதனிடம் நாம் அன்பாய் இருக்கவேண்டும்.

பயிற்சி

1. விடை சொல்லு.

(1) வீட்டில் வளர்க்கக் கூடிய பறவைகள் யாவை?

(2) கோழி எவற்றைத் தின்னும்?

(3) கற்குடலால் கோழிக்கு என்ன பயன்?

(4) அது தன்னை மினுமினுப்பாக்கிக் கொள்வது எப்படி.

2. படி

பொருள் சொல்லு.

உண், விழுங்கு, குடி.
இரை: தீனி: உணவு.
கொத்து: பொறுக்கு: எடு.
எண்ணெய்: வெண்ணெய்.

3. இவற்றின் நிறம் என்ன?

சேவலின் கொண்டை. கோழிமுட்டை: மயிற் கழுத்து.

4. எது நீளம்? எது குட்டை?

பாம்பு. புழு. மரம். செடி. ஆறு. குட்டை.

15. பாட்டுக் கச்சேரி

இந்தக் கச்சேரியைப் பார்?

யார் பாடுகிறார்?

மத்தளம் அடிப்பவர் யார்? அவர் நாவைப் பார்.

பிடில் வாசிப்பவரைப் பார்.

கோழி என்ன செய்கிறது?

ஒரு நாள் கழுதை, கோழி, நாய், பூனை நான்கும் ஓரிடத்தில் கூடின. கழுதை, "நான் நன்றாகப் பாடுவேன்; கோழி தம்புரா

மீட்டட்டும்; நாய் மிருதங்கம் அடிக்கட்டும்; பூனே பிடில் வாசிக்கட்டும். நாம் எல்லோரும் பட்டணம் போய், கச்சேரி பண்ணுவோம்; வருகிறீர்களா ?" என்றது. அதற்கு அவை எல்லாம் ஒத்துக் கொண்டன.

நான்கும் நல்ல உடைகள் உடுத்துக் கொண்டன. நாய் ஒரு மத்தளத்தைத் தூக்கிக் கொண்டது; கோழி ஒரு தம்புராவை எடுத்துக் கொண்டது; பூனே ஒரு பிடிலே பிடித்துக் கொண்டது.

அவை நான்கும் புறப்பட்டன. நடு வழியில் ஒரு காடு இருந்தது. மாலே நேரமும் வந்துவிட்டது. இருட்டுவந்தபோது பாடகர்களுக்குப் பயம் உண்டாயிற்று.

தூரத்தில் ஒரு வீடு தெரிந்தது. அதனுள் ஒரு மனிதன் தனியே வசித்து வந்தான். வீட்டு வாசலில் நம் பாடகர்கள் போய் நின்று பாடத் தொடங்கினர்கள்.

கழுதை, "ஹே....ஹே........ஹே" என்று உரக்கக் கனேத்தது.

நாய், "வொள்....வொள....வொள்" என்று குரைத்தது.

கோழி, "கொக்கறக்கோ.........." என்று கூவிற்று.

பூனே, "ஞாங்........ஞாங்........" என்று கத்திற்று.

இந்தக் கூக்குரலைக் கேட்டு வீட்டுக்காரன் பயந்து ஓடிவிட்டான். பிறகு அவை உள்ளே புகுந்து, அங்கே இருந்த உணவு எல்லாவற்றையும் தின்றுவிட்டன. பிறகு அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் கச்சேரி செய்யத் தொடங்கின.

அவை கச்சேரி செய்வதைப் படத்தில் பாருங்கள்.

பயிற்சி

படி

மேளம்	குழல்
பாட்டு	பிடில்
வீணை	நடனம்

வினாக்கள்

(1) நீ பாட்டுக் கச்சேரி பார்த்திருக்கிறாயா ?

(2) பின் வரும் சொற்களைத் தகுந்த இடத்தில் வை.

உறுமும்; குரைக்கும்; கதறும்; கூவும்; கர்ச்சிக்கும்; கனைக்கும்; ஊளையிடும்; கொஞ்சும்.

சிங்கம் ——

நாய் ——

குயில் ——

பன்றி ——

நரி ——

கிளி ——

மாடு ——

குதிரை ——

16. கூடை முடைதல்

உன் ஊரில் என்ன என்ன கைத் தொழில்கள் நடக்கின்றன? நீ கவனித்திருக்கிருயா? நமக்கு வேண்டிய பலவற்றையும் நாமே செய்து கொள்வது நல்லது.

இந்தப் படத்தில் இருப்பவரைப் பார். அவர் கூடை முடைகிருர். முறம், சல்லடை, குடலே, பாய், கூண்டு முதலிய பலவற்றையும் அவர் முடைவார்.

அவர் ஒரு போதும் சோம்பேறியாய் இருக்க மாட்டார். அவர் கொல்லேகளுக்குச் சென்று நல்ல மூங்கில்களே வெட்டி வருவார்.

அவர் வீட்டுக் கூரையின்மேல் மூன்று மூங்கில் தூண்டுகள் சாத்தியிருப்பதைப் பார்.

முதலில் அவர் மூங்கிலைப் பிளப்பார். அவற்றை அவர் மெல்லிய சிம்புகளாகச் சீவிக் கொள்வார். சிம்புகள் நார்போல் வளையும்; ஆனால் உறுதியாயிருக்கும். சிம்புகளால் கூடை முடையலாம். ஓலை, பிரம்பு, கோரை ஆகியவையும் கூடை முடைய உபயோகப்படும்.

கூடைகளில் பல விதம் உண்டு. அவற்றிற்குச் சாயம் பூசலாம். நாம் நம் வீட்டுப் பொருள்களைக் கூடைகளில் வைக்கலாம். அவை கனமாய் இரா. ஆகையால் அவற்றைத் தூக்குவது எளிது.

நாமும் கூடை முடையவும் பாய் பின்னவும் கற்றுக்கொள்வது நலம். அதனால் நமக்குக் கைத்தொழில் படியும்; கையால் வேலை செய்கிறவர்களுக்கு அறிவும் கூர்மையாகும். நமக்கு வேண்டிய பொருள்களும் நமக்குக் கிடைக்கும்.

பயிற்சி

1. படி

பாய்பின்னுதல் கூடைமுடைதல் துணிநெய்தல்
கைத்தொழில் பயிர்த்தொழில் குடிசைத்தொழில்

2. விடைகூறு

(1) உன் வீட்டிலுள்ள தட்டு முட்டுச் சாமான்கள் யாவை?

(2) பின் காணப்படும் பொருள்களின் பெயர்களைக் கீழே உள்ள அட்டவணையில் எழுது.

சட்டி, முறம், உரல், வெண்கலப் பானை, பாய்' பிரப்பந் தட்டு, கூடை, செம்பு, நாற்காலி, அண்டா, மண் கூஜா.

பித்தளை	வெண்கலம்	மரம்	மண்	பிரம்பு, மூங்கில், ஓலை

---

17. நாப்பழக்கம்

கீழே உள்ளவற்றைப் பலமுறை உரக்க வேகமாகப் படி

(1) கீழே ஏழு ஓலை; மேலே ஏழு ஓலை.

(2) ஒன்பது நரியிலே ஒரு நரி கிழ நரி.

(3) கிழ நரி பிடரியில் ஒரு பிடி நரை மயிர்.

(4) மலையோரத்திலே உரல் உருளுகிறது, புரளுகிறது பார்.

(5) பிட்டுச் சுட்டுப் பெட்டியிலே போடு.

(6) சுண்ணும்பு வாங்கவில்லையோ! பிண்ணுக்கு வாங்க வில்லையோ!

---

18. சூரியன்



வானத்தைப் பார். வானத்தில் சூரியன் எங்கே இருக்கிறான் பார்.

சூரியனை நன்றாகப் பார்க்க முடிகிறதா? இல்லை. ஏன்? அவனைப் பார்த்தால் கண் கூசுகிறது. அவன் அவ்வளவு பளபளப்பாய் இருக்கிறான்? அவன் காலையில் கிழக்கே கிளம்பி, மாலையில் மேற்கே மறைகிறான். சூரியன் மறைந்தபின் இரவு வருகிறது.

இரவு இருள் மூடி இருக்கும். அப்போது நாம் உறங்குவோம். விடிந்ததும் நாம் விழித் தெழுந்து நம் வேலைகளைச் செய்யத்

தொடங்குகிறோம். படத்தில் யார் யார் என்ன என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் பார்.

உயிர்களின் வளர்ச்சிக்கு வெப்பமும் ஒளியும் வேண்டும். அவற்றைச் சூரியன் உலகுக்கு அளிக்கிறான். சூரிய வெப்பத்தால் நீர் ஆவியாக மாறி மேகமாகிறது. மேகத்தால் நாம் மழை பெறுகிறோம். சூரியன் நமக்குச் செய்யும் உதவியைப் பார்த்தீர்களா?

சூரியன் என்றாவது சோம்பி இருந்தது உண்டா? நாமும் சூரியனைப் போல் சோம்பலில்லாமல் உழைக்க வேண்டும்.

பயிற்சி

1. படி

(1) சூரியனுக்கு உள்ள வேறு பெயர்கள்:— ஞாயிறு, கதிரவன்,

(2) ஒரு நாளின் இரண்டு பகுதிகள்:—பகல், இரவு.

(3) ஒரு பகலின் மூன்று பகுதிகள்:—காலை, நடுப்பகல், மாலை.

2. விடை சொல்லு.

(1) உன் ஊருக்குக் கிழக்கே இருப்பது என்ன? அப்படியே மற்ற மூன்று திசைகளிலும் உள்ளவற்றைச் சொல்லு,

(2) சூரியன் நமக்கு என்ன என்ன கொடுக்கிருன்?

(3) மேகம் எப்படி உண்டாகிறது?

(4) மேகம் நமக்கு என்ன கொடுக்கிறது?

3. படம்பார்த்து எழுது

(1) உழவன், (2) பெண், (3) பையன்கள், (4) குதிரை, (5) மாடுகள்—செய்வன யாவை என்று சொல்லு.

(2) ஆற்றைக் கடக்க என்ன இருக்கிறது?

(3) படத்தில் நீ பார்க்கும் மரங்கள் யாவை?

19. சூரியன் குஞ்சு



வெகு காலத்துக்கு முன்னே ஓர் ஊரில் மூடன் ஒருவன் இருந்தான். அவனை ஊரார் மட்டி என்று அழைத்தார்கள். அதுவே அவன் பெயரும் ஆயிற்று.

மட்டி வாழ்ந்த ஊர் ஒரு பட்டிக்காடு. அந்த ஊர் மக்கள் விளக்கையே பார்த்ததில்லை. அவர்கள் சூரியன் மறைவதற்கு முன்னேயே உண்டுவிட்டு உறங்கி விடுவார்கள்,

மட்டியின் அத்தை ஒரு பட்டணத்தில் வாழ்ந்து வந்தாள். ஒரு முறை மட்டி தன் அத்தை வீட்டுக்குப் போனான். அங்கே

அவன் கண்டவை எல்லாம் அவனுக்கு வியப் பைத் தந்தன.

இரவு வந்ததும் ஊரார் தங்கள் தங்கள் வீடுகளில் விளக்குகளை ஏற்றி வைத்தார்கள். மட்டியின் அத்தையும் ஒரு விளக்கு ஏற்றி ஞள். அதைப் பார்த்து மட்டி மலைத்து விட் டான். 'இது என்ன?' இது என்ன? என்று அவன் அனைவரையும் கேட்டான். அவன் அறியாமையைக் கண்டு அவர்கள் அவனைப் பார்த்து நகைத்தார்கள். அத்தை, 'இது, சூரி யன் குஞ்சு' என்று பதில் சொன்ஞள்.

மறுநாள் காலையில் மட்டி தன் ஊருக் குப் போவதாக இருந்தான். எப்படியாவது சூரியன் குஞ்சையும் எடுத்துப் போய்விட வேண்டு மென்று அவன் விரும்பினுன். அதை எப்படியாவது ஒளித்து வைத்துவிட அவன் எண்ணிஞன். ஆகவே, வீட்டில் உள்ளவர்கள் உறங்கும் வரையில் அவன் விழித்திருந்தான். அவர்கள் தூங்கிய பிறகு அவன் மெதுவாக எழுந்து, விளக்கை எடுத் துக் கொண்டான். சந்தடி செய்யாமல் அவன் நடந்து வீட்டின் முன்புறத்துக்குச் சென்ருன். அங்கே வைக்கோல் போரொன்று இருந்தது. அதன் ஓரத்தில் பல மரக்கட் டைகள் அடுக்கிக் கிடந்தன. அவற்றின்

இடையில் ஓர் இடுக்கு இருந்தது. மட்டி அதனுள் தன் சூரியன் குஞ்சை ஜாக்கிரதையாய் வைத்து விட்டுத் திரும்பினான். அவன் மெதுவாக வீட்டினுள் நுழைந்து படுத்துக்கொண்டு தூங்கலானான்.

பிறகு நடந்தது இன்னதென்று சொல்லவும் வேண்டுமோ? விளக்கின் நெருப்பு அருகிலுள்ள குப்பைகளில் பிடித்துக்கொண்டது. அது கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி, வைக்கோற்போரை எரித்து விட்டது. வீட்டையும் நெருப்பு பிடித்துக் கொண்டது. வீட்டிலுள்ளவர் எல்லோரும் அங்கும் இங்கும் ஓடினர். வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் எரிந்து போயின. ஊராரெல்லாரும் ஓடி வந்து அரும்பாடு பட்டு நெருப்பை அணைத்தனர். அவ்வூரில் அன்று இரவு ஒருவரும் உறங்கவில்லை.

விடிந்தபின் வீட்டிலுள்ளவர் தங்கள் பொருள்களுள் ஏதேனும் சேதமாகாமல் இருக்குமோ என்று தேடிப் பார்த்தனர். மட்டியும் ஏதோ ஒன்றை ஆராய்ந்து கொண்டே இருந்தான்.

அவன் அத்தை, "என்னடா, சுப்பா, தேடுகிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அவன், "நான் சூரியன் குஞ்சை ஒளித்து வைத்திருந்தேன்! காணவில்லையே!" என்றான்.

அதைக் கேட்டவர்கள் என்ன செய் திருப்பார்கள்? நீங்களே சொல்லுங்கள்.

பயிற்சி

இந்தக் கதையை மனத்திற்குள் படி. பின் வரும் வினுக்களுக்கு விடைகூறு.

(1) அத்தை வீட்டில் மட்டி கண்ட அதிசயம் யாது?

(2) விளக்கைச் 'சூரியன் குஞ்சு' என்றது ஏன்?

(3) மட்டி சூரியன் குஞ்சை எங்கே ஒளித்து வைத்தான்?

(4) அதனுல் என்ன உண்டாயிற்று?

(5) மட்டி எதைத் தேடினுன்?

2. படி-எழுது

மூடன், பட்டிக்காடு, மலேத்து, வைக்கோல் போர், மட்டி, ஜாக்கிரதை, சந்தடி, இன்னதென்று, அங்கும் இங்கும், முன்புறம், ஓரம், இடுக்கு, சேதம், பின்புறம், வியப்பு, ஆராய்ந்து.

பின்வரும் சொற்களேக் கோடிட்ட இடங் களில் தகுந்தபடி நிரப்பு:—இடையில், முன்னே, மெதுவாக.

(1) ஊரார் சூரியன் மறைவதற்கு —— உண்டு உறங்கினுர்கள்.

(2) எல்லாரும் தூங்கவிட்டு அவன் —— எழுந் தான்.

(3) மரக்கட்டைகளின் —— ஓர் இடுக்கு இருந்தது.

20. விடுகதைகள்

முத்துச் சிலம்புக்காரி?
முப்பணத்து ஓலைக்காரி;
தண்டைச் சதங்கைக்காரி;
தாழ்வார வீட்டுக்காரி;
அவளைத் தொடுவானேன்!
கவலைப் படுவானேன்!

அவள் யார்?



பாதாளத்திலே
பிறந்தவன்;
பம்பரத்திலே
சுழன்றவன்;
இளம் வெயில்
காய்ந்தவன்;
நெருப்பு மூலை
கண்டவன்;
அவரவர் வீட்டுக்குப்
போனவன்;

யார் அவன்?



ஏறினல் வழுக்கும்;
இலை சுருளும்;
காய் துவர்க்கும்;
பழம் இனிக்கும்;

எது அது?



நீரிலே விளையும் பூ;
நிலத்திலே ஓடாப் பூ;
மாதர் கொண்டைக்கு
ஆகாப் பூ;
ஊரெல்லாம் உலவிவரும் பூ;

அது என்ன பூ?

பயிற்சி

1. படி

தேள்	பானை	வாழை	உப்பு
கேள்	யானை	தாழை	மப்பு
வேள்	பூனை	மோழை	தப்பு

2. விடை சொல்

(1) சிலம்பு எங்கே அணிவது?
(2) ஓலை எங்கே அணிவது?
(3) சதங்கை எங்கே அணிவது?
(4) எது துவர்க்கும்?
(5) எது இனிக்கும்?

3. கோடிட்ட இடங்களை நிரப்பு

இனிக்கும்; புளிக்கும்; எரியும்; துவர்க்கும்; கசக்கும்; கரிக்கும்.

(1) தேன் ———
(2) எலுமிச்சை ———
(3) மிளகாய் ———
(4) வாழைக்காய் ———
(5) வேப்பங்காய் ———
(6) உப்பு ———

21. காட்சிச்சாலை

காட்டு விலங்குகள்

இன்று நாம் காட்சிச் சாலைக்குப் போவோம் வா. இச்சாலையில் ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகிய பலவிதமான பிராணிகள் இருக்கின்றன. விலங்குகள் எல்லாம் நடப்பனவே. அவற்றுள் பல விலங்குகள் காடுகளிலேயே வாழும். அவை மிகக் கொடியவை. அவற்றுள் சிலவற்றைப் பிடித்துக் கூண்டுகளில் வைத்துக் காட்டுகிறார்கள்.

இதோ பார்.



ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக மூன்று கூண்டுகளுள் கொடிய காட்டு விலங்குகள் இருக்கின்றன. அக் கூண்டுகளுக்கு வலிய

இரும்புக் கம்புகள் இட்டிருக்கிறார்கள் பார். இல்லாவிட்டால் அவ்விலங்குகள் வெளியே வந்துவிடும்.

முதற் கூண்டில் இருப்பவை சிங்கங்கள். அவற்றுள் ஒன்று ஆண், மற்றது பெண். ஆண் சிங்கத்துக்குப் பிடரி மயிர் உண்டு. சிங்கத்தை விலங்குகளுக்கெல்லாம் மன்னன் என்பார்கள். அது அத்தனை வலிமை உடையது. சிங்கம் யானையைக் கூட அடித்து விடும்.

அடுத்த கூண்டில் இருப்பது புலி. அதன் உடல் எவ்வளவு நீளமாய் இருக்கிறது பார். அதன் மேல் தோல் மிகவும் பளபளப்பாகவும் வழவழப்பாகவும் இருக்கும். அதன் மேலே அழகான கோடுகள் இருக்கும். புலியில் பல வகைகள் உண்டு. புலி பூனை இனத்தைச் சேர்ந்தது; அதற்கு இரவில் கண் நன்றாய்த் தெரியும். "பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி" என்கிறார்களே! அதன் பொருள் உனக்குத் தெரியுமா? பாய்ச்சலில் புலிக்கு நேரான வேறொரு விலங்கு கிடையாது. புலி மிகக் கொடுமையானது.

அடுத்த கூண்டைப் பார். அதில் ஒரு தாய்க் கரடி தன் இரண்டு குட்டிகளுடன் நிற்கிறது. கரடியும் மிகக் கொடூரமான

விலங்கு. அதற்கு உடல் முழுமையும் கரிய மயிர் மூடியிருக்கும்.

இன்னும் இக்காட்சிச் சாலையில் எத்தனையோ விதம் விதமான விலங்குகள் உண்டு. ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி, கோவேறு கழுதை, காண்டா மிருகம், நீர் யானை, மான் முதலிய பல இங்கே உண்டு.

பயிற்சி

பின்வரும் பெயர்களை வீட்டு விலங்கு, காட்டு விலங்கு, என்று பிரித்துக் காட்டு.

எருமை, முள்ளம்பன்றி, ஆடு, நீர்யானை, பூனை, புலி, கழுதை, சிங்கம், பசு, சிறுத்தைப்புலி,

2. பின்வரும் பெயர்களை, ஊர்வன நீர், வாழ்வன, பறப்பன, நடப்பன, எனப் பிரித்துக் காட்டு.

மீன், புழு, பாம்பு, யானை, கருடன், பல்லி, முதலை, தவளை, காகம், நாய். எறும்பு, புலி, புரு, நாகப்பூச்சி, மைனு சிங்கம், வெளவால், எலி

3. பிடரி மயிருடைய விலங்குகள் இரண்டின் பெயர்களைச் சொல்லு.

4. இரவில் கண் தெரியும் பிராணிகள் இரண்டின் பெயர்களைச் சொல்லு.

5. நீரிலும் தரையிலும் வாழும் இரண்டு பிராணிகளின் பெயர்களைச் சொல்லு.

---

22. வீரவீரப்பன்



இந்தப் படத்தில் பையன் என்ன செய்கிருன் பார்? காளை எவ்வளவு முரட்டுத் தனமாய்ப் பாய்கிறது? அதைப் பையன் மிகுந்த வீரத்துடன் அடக்குகிருன் பார். அவன் பெயர் வீரப்பன். அவன் அருகில் நிற்பவர் முருகப்பிள்ளை என்பவர்.

முருகப் பிள்ளை ஊரில் பெரிய பணக்காரர். அவரிடம் பல காளைகள் இருந்தன. ஒரு நாள் ஒரு காளை கட்டுக்கு அடங்காமல் வீட்டை விட்டு ஓடிவிட்டது. முருகப் பிள்ளையும் அவருடைய ஆட்களும் எவ்வளவோ முயன்ருர்கள். அதைப் பிடிக்க

அவர்களால் முடியவில்லை. காளை ஊருக்கு வெளியே நெடுந்தூரம் ஓடிவிட்டது.

அங்கே வீரப்பன் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தான். அவன் துள்ளி ஓடி வருகிற காளையைக் கண்டான். அவன் சரே ரென்று ஓடிவந்து அந்தக் காளையின் கயிற்றை ஒரு கையாலும், மூக்காங் கயிற்றை மற்றொரு கையாலும் பிடித்து அதை நிறுத்திவிட்டான். அது ஆனமட்டும் துள்ளிப் பாய்ந்தது. ஆனால் அதனால் அவனிடமிருந்து தப்பி ஓட முடிய வில்லை. அதற்குள் முருகப் பிள்ளையும் அங்கே வந்து சேர்ந்தார். அவர் மெதுவாக அக் காளையை வீரப்பனிடமிருந்து பெற்று வீடு சேர்ந்தார்.

அன்று அவருக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அன்று மாலை அவர் ஊரா ரெல்லோரையும் அழைத்து வீரப்பனின் வீரத்தை அவர்கள்முன் மெச்சினார். அவனுக்கு ஒரு ஜோடி ஆடைகள் இனாமாக அளித்தார். அன்றுமுதல் ஊரார் அவனை வீரவீரப்பன் என அழைத்தனர்.

பயிற்சி

1. விடை சொல்லு

(1) முருகப் பிள்ளை எவற்றை வளர்த்து வந்தார்?

(2) காளையின் அருகே போக ஏன் ஆட்கள் பயந்தனர்?

(3) வீரப்பன் காளையை எப்படி அடக்கினன்?

(4) அவன் காளையை நன்ருகப் பிடித்திரா விட்டால், அது அவனை என்ன செய்திருக்கும்?

(5) வீரப்பன் தன் உயிருக்கு அஞ்சினனு?

(6) ஊரார் வீரப்பனுக்கு என்ன பெயர் இட்டார்கள்?

(7) உன் ஊரில் வீரர்கள் யாரேனும் உண்டோ?

(8) உனக்கு வீரக் கதை ஏதேனும் தெரியுமா?

2. படி

வீரம்	அச்சம்	மெச்சு
தைரியம்	பயம்	புகழ்
துணிச்சல்	நடுக்கம்	மரியாதைசெய்

3. பின்வருவனவற்றை ஆண், பெண் என்று பிரித்துக்காட்டு.

சேவல், கடாரி, காளை, வீரன், பெட்டை கடா, அரிசி.

23. பாட்டி வீட்டுப் பழம் பானை



இப் படங்களைப் பார்
இப் பாட்டை மனதிற்குள் படி.
படித்து விட்டுக் கதை சொல்லு.

பாட்டியின் வீட்டுப்
 பழம் பானை — அந்தப்
பானையும் ஒரு புறம்
 ஓட்டையடா !

ஓட்டை வழி ஒரு
 சுண்டெலியும் — அதன்
உள்ளே புகுந்து நெல்
 தின்றதடா !

உள்ளே புகுந்து நெல்
 தின்று தின்று — வயிறு
ஊதிப் புடைத்துப்
 பருத்ததடா !

மெள்ள வெளியில்
 வருவதற்கும் — ஓட்டை
மெத்தச் சிறிதாகிப்
 போச்சுதடா !

பானையைக் காலை
 திறந்தவுடன் — அந்தப்
பாட்டியின் பக்கமாய்
 வந்த வொரு

பூனை எலியினைக்
கண்டதடா !—ஓடிப்
போயதைக் கௌவியே
சென்றதடா !

கள்ள வழியினிற்
செல்பவரை—எமன்
காலடி பற்றித்
தொடர்வானடா !

உள்ள படியே
நடப்பவர்க்குத்—தெய்வம்
உற்ற துணையாக
நிற்குமடா !

—திரு. தேசிக விநாயகம் பிள்ளை.

பயிற்சி

விடை சொல்லு

(1) பானைக்குள் பாட்டி என்ன வைத்திருந்தாள்?
(2) எலி அதற்குள் எப்படி நுழைந்தது ?
(3) உள்ளே எலி என்ன செய்தது ?
(4) ஏன் அதனால் வெளியே வரமுடியவில்லை?
(5) காலையில் பாட்டி என்ன செய்தாள் ?
(6) எலி எப்படி வெளியே வந்தது?
(7) பாட்டியுடன் வந்தது எது?
(8) அது என்ன செய்தது?

2. எழுது

எமன் கள்ளர்களைத் தொடர்வான். கள்ளர்
தெய்வம் நல்லவர்களைக் காக்கும்.

24. தீபாவளி

ஆண்டுதோறும் ஐப்பசி மாதம், அமாவாசைக்கு முந்தின இரவு தீபாவளி கொண்டாடுகிறோம். அன்று விடிவதற்கு முன்னே

வீட்டில் உள்ளவர்கள் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள்; வீடெல்லாம் விளக்கு ஏற்றிவைப்பார்கள்; கடவுளுக்கு நல்ல தின்பண்டங்கள் படைத்து வணங்குவார்கள் அன்று எல்லோரும் புதிய ஆடைகள் கட்டுவார்கள். பிள்ளைகள் பலவித வாணங்கள் விட்டும், வெடிகள் வெடித்தும், மகிழ்ச்சியுடன் பொழுது போக்குவார்கள். அன்று ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டமாயிருக்கும்.

முன் ஒரு காலத்தில் நரகன் என்ற ஓர் அரக்கன் இருந்தானும். அவன் எல்லோரையும் துன்புறுத்தி வந்தானும். அவனைக் கிருட்டின பகவான் கொன்றுவிட்டாராம். அந்த நாளைக் கொண்டாடவே நாம் தீபாவளி கொண்டாடுகிறோம்.

சில ஊர்களில் மக்கள் ஆறுகளுக்குச் சென்று அங்கே விளக்குகளை ஏற்றி நீரில் மிதக்க விடுவார்கள். கோவில்களிலும் அன்று திருவிழாக் கொண்டாடுவார்கள். இவ்வாறு இந்தியா முழுவதும் தீபாவளி கொண்டாடப்படுகிறது.

பயிற்சி.

1. விடை சொல்லு

(1) தீபாவளி எந்த மாதத்தில் நிகழும்?

(2) எதற்காக நாம் தீபாவளி கொண்டாடுகிறோம்?

(3) பிள்ளைகள் அன்று என்ன செய்வார்கள்?

(4) தீபாவளி என்றால் விளக்குகளின் வரிசை என்பது பொருள். இந்தப் பெயர் இப்பண்டிகைக்கு ஏன் வந்தது?

(5) தமிழ் நாட்டில் விளக்கேற்றும் விழா எப்பொழுது நடைபெறும்.

2. படி எழுது

தமிழ் வருஷப் பிறப்பு : ரம்ஸான் ; ஆவணி அவிட்டம்; ஸ்ரீஜயந்தி: பிள்ளையார் சதுர்த்தி : பக்ரீத் : ஆயுதபூசை, மோஹரம்: தீபாவளி : கிருஸ்த்மஸ் : ஆங்கில வருஷப் பிறப்பு. மாட்டுப் பொங்கல்

3. பின் வருவனவற்றைச் செய்யும் பண்டிகை நாட்கள் யாவை?

(1) பூணூல் போட்டுக் கொள்வது.

(2) பட்டாசு கொளுத்துவது.

(3) கொழுக்கட்டை செய்வது;

(4) புத்தகங்களை வைத்து வணங்குவது.

(5) மாடுகளுக்குப் பூசை செய்வது.

25. பழமொழிகள்

அழுத பிள்ளை பால் குடிக்கும்.

ஆடை இல்லாதவன் அரை மனிதன்.

இருந்த கால் மூதேவி; நடந்த கால் சீதேவி.

உண்டதுதானே ஏப்பம் வரும்,

ஊர் வாயை மூட உலைமூடி இல்லை.

எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

ஓணான் வேலிக்கு இழுக்கிறது; தவளை தண்ணீருக்கு இழுக்கிறது

பயிற்சி :

(1) இவற்றை உரக்கப் படி. பலதடவை படி.

(2) நீ கேட்ட வேறு பழமொழிகளைச் சொல்.

26. உன்னைச் சுற்றிப் பார்

உன்னைச் சுற்றிப் பார். சூரியனும் சந்திரனும் நமக்கு வெளிச்சம் கொடுக்கிறார்கள். காற்று ஜில் என்று வீசி நம்மைக் குளிரச் செய்கிறது. மழை தண்ணீரைப் பொழிந்து ஆற்றையும் குளத்தையும் வயல் களையும் நிரப்புகிறது. புல் பூண்டுகளும் செடிகளும் கொடிகளும் நமக்கு வேண்டிய உணவைக் கொடுக்கின்றன. மாடுகளும் ஆடுகளும் நமக்குப் பாலைத் தருகின்றன. காளை, குதிரை முதலியன நமக்காக உழைக்கின்றன. மலர்கள் நமக்கு அழகையும் மணத்தையும் அளிக்கின்றன.

இப்படி உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் நமக்கு நன்மையைச் செய்கின்றன. நாம் அவற்றிற்குத் திரும்ப நன்மை செய்ய வேண்டாமா? எப்படி நன்மை செய்வது? அவற்றினிடம் நாம் அன்பு காட்டவேண்டும். அதுவே நாம் அவற்றிற்குச் செய்யும் நன்மை. நாம் ஒன்றிற்கும் தீமை புரியலாகாது. நாம் எல்லாரிடமும் அன்பு காட்டவேண்டும். அப்படிச் செய்தால் உலகில் தீமையே நடவாது.

பயிற்சி:

1. படி

சூரியன்	குளம்	கொடு
சந்திரன்	வயல்	தா
காற்று	புல்	அளி
மழை	பூண்டு	நன்மை
ஆறு	செடி	தீமை

2. விடைச் சொல்லு

(1) சூரியன் நமக்குச் செய்யும் நன்மை யாது?
(2) மழை நமக்குச் செய்யும் நன்மை யாது?
(3) பூமி நமக்கு என்ன தருகிறது?
(4) ஆடுமாடுகள் நமக்குச் செய்யும் உதவி என்ன?

3. எழுது

மழை சோவென்று பொழிகிறது
வெயில் சுரீரென்று காய்கிறது
தண்ணீர் ஜில்லென்று இருக்கிறது.

27. காற்றுடி



ஒரு நாள் மாலை நேரம். கந்தன் தன் ஊர்ப்புற மந்தை வெளியில் காற்றுடி விட்டுக் கொண்டு இருந்தான். காற்றுடி வானத்தில் வெகு உயரத்தில் உல்லாசமாக ஆடிக்கொண்டு நின்றது. ஊர்ப் பிள்ளை களிற் பலர் வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தனர்.

சரேரென்று காற்று வேகமாக அடிக்கத் தொடங்கிற்று. மரங்களெல்லாம் அசைந் தன. காற்றுடிக்குத் தானும் காற்றோடு

பறக்கவேண்டும் என்ற ஆசை உண்டா யிற்று. அது காற்றைப் பார்த்து, "அண்ணு, என்னையும் உன்னுடன் அழைத்துப்போ. எனக்கும் உன்னைப் போல அலைய ஆசையாய் இருக்கிறது. இந்தக் கயிற்றால் கட்டுப்பட்டு நிற்க நான் விரும்பவில்லை" என்றது.

அதற்குக் காற்று, "தம்பி, நீ இப் பொழுது கவலையில்லாமல் வானத்தில் மிதந்து கொண்டிருக்கிருய். என்னைப் பார்; மரங்கள் மேலும் மலைகள்மீதும் மோதிக் கொண்டு அலைகிறேன். நீ இருக்கும் இடத்தி லேயே இரு. அதுவே இன்பமானது" என்றது.

காற்றுடி, "அண்ணு, நான் விலங்கு இடப்பட்டவன்போல் இருக்கிறேன். என் மனம் போனபடி அலைய என்னுல் முடிய வில்லை. என்னை உன்னேடு தயவு செய்து அழைத்துப்போ; நான் உன்னைக் கும்பிடு கிறேன்" என்று சொல்லி வணங்கிற்று.

அதற்குக் காற்றுடி இணங்கிச் சற்று அதிக வேகமாக அடித்தது. கயிறு அறுந் தது. காற்றுடி காற்றேடு வேகமாகச் சென்றது. அப்பொழுது அதற்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனுல் அது செல்லும் வழியில் ஒரு மரம் இருந்தது. அதனில் அறுந்த கயிறு சிக்கிக்

கொண்டுவிட்டது. அதன்மேல் காற்றுடியால் பறக்க முடியவில்லை. அங்கேயே அது தொங்கிற்று. காற்று மேலும் மேலும் வீச அதன் உடலெல்லாம் கிழிந்துபோய் விட்டது. அப்பொழுது அது பட்ட வருத்தத்தைச் சொல்லவும் வேண்டுமோ?

பயிற்சி:

1. விடை சொல்லு

(1) காற்றுடி காற்றைப் பார்த்து என்ன கேட்டது?

(2) காற்று சொன்ன பதில் என்ன?

(3) காற்றுடி மேலும் எப்படிக் கெஞ்சிற்று?

(4) காற்றுடி எப்படி ஆயிற்று?

2. படி

மாலைநேரம்	சரேரென்று	வருத்தம்
உல்லாசமாக	மேலும் மேலும்	மிதந்து
சரேரென்று	ஆசை	மோதி
வேடிக்கை	வானம்	இணங்கி
அலை	மலை	குலை
அழை	மழை	குழை

இரண்டு பொருள்கள் சொல்லு:

அலை. மலை. விலங்கு.

28. பால் பிடிக்காத பூனை

ஒரு நாடகம்

காட்சி 1

தெனாலிராமனும் அவன் மனைவியும் பேசிக் கொள்கின்றனர்.

தெனாலிராமன்: ஊரில் எலிகள் பெருத்துப் போயினவாம். அதற்காக ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பூனை வளர்க்க வேண்டுமாம். அரசர் கட்டளை.

மனைவி: அதற்கு உணவுக்கு என்ன செய்கிறது?

தெனாலி: அதற்காக அரண்மனையிலிருந்து ஒவ்வொருபடி பால் அனுப்புவார்களாம்.

மனைவி: நமக்குக் குடிக்கப் பால் இல்லை. பூனைக்குப் பாலா?

தெனாலி: ஏன்? நாமே பாலையெல்லாம் குடித்து விடுவோமே!

மனைவி: பூனை இளைத்து விடுமே! அரசர் வந்து கேட்டால் என்ன சொல்வது?

தெனாலி: அதற்கு நான் ஒரு வழி செய்கிறேன். நாளைக்குப் பூனையும் பாலும் வரட்டும்.

காட்சி 2

தெனலி: இதோ உள்ள பாலைக் கொதிக்கக் கொதிக்கக் காய்ச்சி வா இந்தப் பூனை பாலைக் கண்டதும் எப்படிப் பறக்கிறது பார். கொண்டுவா சீக்கிரம்.

மனைவி: இதோ கொண்டு வந்து விட்டேன். பொங்கப் பொங்கக் காய்ச்சி யிருக்கிறேன்.

[பாலை ஒரு கிண்ணத்தில் கொண்டு வைக்கிறாள். பூனை அதைக் குடிக்கப் போகிறது.]

தெனலி: ஐயோ! பூனை எப்படி ஓடுகிறது பார்.

மனைவி: ஐயோ! அதன் முகமெல்லாம் வெந்து விட்டதே! ஐயோ! பாவம்!

தெனாலி: அதனால் என்ன? இனி அது ஒரு நாளும் பாலின் அருகில் கூட வராது. பால் இனி நமக்கே.

காட்சி 3

அரசர் கோபத்துடன் பேசுகிறார். தெனாலி ஒதுங்கி நிற்கிறான். பூனை மெலிந்து நிற்கிறது.

அரசர்: ஏனடா உன் வீட்டுப் பூனைமட்டும் இவ்வளவு இளைத்திருக்கிறது? நான் கொடுக்கும் பாலை என்னடா செய்கிறாய்?

தெனாலி: சுவாமி, பூனை பாலைத் தொடக் கூட மாட்டேன் என்கிறதே! பாலைக் கண்டதும் பிடிக்கிறதே ஓட்டம்! நான் என்ன செய்வேன்!

அரசர்: பால் பிடிக்காத பூனையும் உண்டோ? நீ சொல்வதெல்லாம் பொய்.

தெனாலி: தாங்களே நேரில் பாருங்கள். நல்ல பாலை இதோ கொண்டு வருகிறேன்! பூனை குடிக்கிறதா, பாருங்கள்.

(உள்ளே போய் ஒரு கிண்ணத்தில் பாலைக் கொண்டு வைக்கிறான். அதைக் கண்டதும் பூனை ஓடி விடுகிறது.)

அரசர்: ஆமாம், நீ சொல்வது உண்மைதான். இந்தப் பூனைக்குப் பால் பிடிக்கவில்லை. நீ என்ன செய்வாய்? இனி, உன்மேல் கோபம் இல்லை. போ.

(போகிறார், தெனாலி ராமனும் மகிழ்ச்சியுடன் வீட்டுக்குள் போகிறான்.

பயிற்சி:

1. விடை சொல்லு

(1) அரசர் வீடுதோறும் ஏன் பூனை வளர்க்கக் கட்டளை இட்டார்?

(2) தெனாலிராமன் பாலைத் திருட என்ன செய்தான்?

(3) அரசர் ஏன் ஏமாந்து போனார்?

2. படி - எழுது

ஒவ்வொரு	சுவாமி	அரண்மனை
கொதிக்கக் கொதிக்க	ஐயோ	கிண்ணம்
பொங்கப் பொங்க	பாவம்	கோபம்

இளை	வலி	பாலை	நாளும்
இலை	வழி	பாளை	நாலும்
இழை			

வினாக்கள்

(1) "நான் என்ன செய்வேன்?" இப்படிச் சொன்னவர் யார்?

(2) "பால் பிடிக்காத பூனை உண்டோ?" இப்படிக் கேட்டவர் யார்?

(3) "நமக்குக் குடிக்கப் பால் இல்லை." இப்படிச் சொன்னவர் யார்?

29. உலகநீதி

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல
வேண்டாம்.

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
அஞ்சாமல் தனி வழியே போக வேண்டாம்.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல
வேண்டாம்.

கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்.
தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க
வேண்டாம்.
தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

30. ஆத்திசூடி

அறம் செய விரும்பு.

ஆறுவது சினம்.

ஊக்கமது கைவிடேல்.

எண் எழுத்து இகழேல்.

ஏற்பது இகழ்ச்சி.

தந்தை தாய்ப் பேண்.

நன்றி மறவேல்.

இளமையில் கல்.

செய்வன திருந்தச் செய்.

சோம்பித் திரியேல்.

நன்மை கடைப்பிடி.

தெய்வம் இகழேல்.

சென்னை-600 008.

KAMALA VACHAKAM

STANDARD II

BY

Vidwan. R. VISVANATHAN, M. A., B. O. L.
Pandit, S. MUTHURATHNA MUDALIAR.

VIVEKANANDA PUBLISHING HOUSE,
VIJAYAPURAM, — TIRUVARUR Jn.

Price Annas 0—6—0